# விலைக்கேள்விக்கான கோரல்(IFB - 31)

# கட்டடங்கள் திணைக்களம்,வடமாகாணம்

1. வடமாகாண கட்டடங்கள் திணைக்கள பிரதம செயலாளர் பெறுகைக்குழுவின் தவிசாளர் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைக்கான தகவுடையோரும் தகைமை பெற்றவருமான விலைக்கேள்வியாளர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைக்கேள்விகளைக் கோருகின்றார்.

2. விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடாத்தப்படும்

3. விலைக்கேள்வியாளர்கள் நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (**CIDA**) கட்டடம் நிர்மாணிப்பதற்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தினை பதிவு செய்யப்பட்டதும் கறுப்புப் பட்டியலில் பெயர் இடம் பெறாதவராயிருத்தலும் வேண்டும்.

4. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் விலைக்கேள்வி ஆவணத்தில் **Bidding Data & Contract Data** (பகுதி 5) இல் உள்ளடக்கப்பட்டுள்ளது.

5. அக்கறைகொண்டுள்ள விலைக்கேள்வியாளர்கள், **பிரதம எந்திரி, கட்டடங்கள் திணைக்களம்,வட மாகாணம், கிருஷ்ணன் கோவில் வீதி, கிளிநொச்சி (தொலைபேசி இல: 021-2285599 தொலைநகல் 021-2285599)** என்னும் முகவரியில் வேலையின் மேலதிக தகவலைப் பெறலாம் என்பதுடன், அம் முகவரியில் மு.ப. **9.00** மணியிலிருந்து பி.ப **4.00** மணிவரை அலுவலக நாட்களில் விலைக்கேள்வி ஆவணத்தை பரிசீலனை செய்யலாம்.

6. அக்கறை கொண்டுள்ள விலைக்கேள்வியாளர் ஆங்கில மொழியிலான விலைக்கேள்வி ஆவணத்தின் பூரணமான தொகுதியொன்றை **மாகாணப் பணிப்பாளர் அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம், வடமாகாணம், கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் (தொலைபேசி இல: 021-2228091/021-2212900 தொலைநகல் 021-2212700) எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து 20.07.2018** முதல் **09.08.2018** வரை மு.ப 9.00 **மணியிருந்து பி.ப 03.00 மணி வரையான** காலப்பகுதியில் மீளளிக்கப்படாத தொகையான **ரூபா 15,000.00** இனை பணமாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

7. விலைக்கேள்விகள் (மூலம், பிரதி) **10.08.2018ம்** திகதியன்று **மு.ப** 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் **தவிசாளர், பிரதம செயலாளர் பெறுகைக்குழு, மாகாணப்பணிப்பாளர் அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம், வடமாகாணம், கடற்கரை வீதி,யாழ்ப்பாணம் எனும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ ஒப்படைத்தல் வேண்டும்**. காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலைக்கான கேள்வி அடையாள இலக்கத்தினை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். விலைக்கேள்விகள், அவைகளை மூடியவுடன் மேலேயுள்ள முகவரியில் சமூகமளித்திருக்கும் விலைக்கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது முன்னிலையில் திறக்கப்படும்.

8. கேள்வி தொடர்பான முதற் கூட்டம் **மாகாணப் பணிப்பாளர் அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம், வடமாகாணம், கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் என்னும்** முகவரியில் **03.08.2018** அன்று மு.ப 10.30 மணிக்கு நடைபெறும்.

9. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப்பொறுப்பு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| கேள்வி அடையாள இல | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) | ஒப்பந்த காலம் | தேவையான தரம் | கேள்விப் பிணை விபரம். | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | தொகை | தேவைப்படும் காலம். |
| NP/B/KI/23(2018) | கிளிநொச்சி முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி அலகில் பயிற்சி வளாகத்தை நிர்மாணித்தல் | 93.60 | 280 நாட்கள் | C4 அல்லது அதற்கு மேல் (கட்டடங்கள்) | 936,000.00 | 06.12.2018 வரை |

தவிசாளர்
பிரதம செயலாளர் பெறுகைக்குழு
கட்டடங்கள் திணைக்களம்
வடமாகாணம்